LIBRARY
26 SEP 1960
STATE LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

Saturday, 9th April 1960.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Electricity cut

* *S.N.Q.* 8.—SRI S. M. ANNAMALAI : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) இவ்வாண்டு மின்சார வெட்டு வரும் என்பது உண்மையா ?

(ஆ) அப்படியானால் எந்த அளவுக்கு எப்போதிலிருந்து அமுலுக்கு வரும் ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Not likely, Sir.

(*b*) Does not arise.

SRI A. R. SUBBIAH MUDALIAR : சென்ற ஒரு மாத காலமாக மேற்கொண்டும் 'கனெக்ஷன்' கொடுக்கவேண்டாம் என்று நிறுத்தப்பட்டிருக்கிறது. அதன் காரணமென்ன ? விவசாயத்திற்காவது கனெக்ஷன் கொடுப்பதற்கு சர்க்காரால் விதிவிலக்கு கொடுக்கப்படுமா ?

THE HON. SRI V. RAMAIAH : நமது மின்சார நிலையத் தேக்கங்களிலே ஒரு மாதத்திற்கு முன் இருந்த நிலை திருப்திகரமாக இல்லாத காரணத்தால், புது கனெக்ஷன் கொடுக்கவேண்டாம் என்று உத்தரவு போட்டார்கள். ஆனால், அந்த உத்தரவு அமுலுக்கு வருவதற்கு முன்னாலேயே அந்த உத்தரவை அமுலுக்குக் கொண்டுவரவேண்டாம் என்று மறு உத்தரவு போட்டுவிட்டோம்.

SRI J. MATHA GOWDER : நீலகிரியில் இருக்கும் பச்சைத் தேயிலை அழுகும் பொருள்களில் சேர்ந்திருப்பதனாலும், ஒரு நாள் மின்சாரம் இல்லாமல் வேலையை நிறுத்திவிட்டால் அது அழுகிவிடும் என்ற காரணத்தாலும், தேயிலை பாக்டரியைப் பொறுத்தவரையிலாவது மின்சார வெட்டு இல்லாமல் செய்வதற்கு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா ?

THE HON. SRI V. RAMAIAH : மின்சார வெட்டு இல்லை என்றே நான் முதல் கேள்விக்கு பதில் சொல்லியிருக்கிறேன். ஆகையால், இது எப்படி எழும் என்று தெரியவில்லை.

SRI A. V. P. ASAITHAMBI : தலைவர் அவர்களே, புது இணைப்பைத் தாமதப்படுத்தாமல் கொடுக்கும்படியாக உத்தரவிட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்பொழுது அந்த உத்தரவு அமுலில் இருந்து அதுமாதிரி கொடுக்கப்பட்டு வருகிறதா ?

THE HON. SRI V. RAMAIAH : புது கனெக்ஷன் கொடுக்க வேண்டாம் என்று மின்சார போர்டார் முடிவு செய்தார்கள். ஆனால், அந்த உத்தரவு அமுலுக்கு வருவதற்குமுன்பே, அதை அமுலுக்குக் கொண்டுவர வேண்டாம் என்று மறு உத்தரவு போடப்பட்டிருக்கிறது.

[9th April 1960

SRI S. M. ANNAMALAI : அமைச்சர் அவர்கள் மறுபடியும் கனெக்ஷன் செய்வதற்கு உத்தரவு போட்டிருப்பதாக இங்கே சொல்கிறார்கள். ஆனால், அதிகாரிகளை அணுகினால், 'நான்கு மாதங்களுக்கு புது சர்விஸ் கனெக்ஷன் கொடுக்கக்கூடாது என்று சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள் ; ஆகையால், கொடுக்க முடியாது' என்று சொல்கிறார்கள். இது உண்மையா ? அல்லது அது உண்மையா ?

MR. SPEAKER : சட்ட சபையில் மந்திரி சொல்லுவதுதான் உண்மை.

THE HON. SRI V. RAMAIAH : நான் அதிலே ஏற்பட்ட சிறு குழப்பத்தை விளக்கும் முறையிலேதான் உபகேள்விக்கு என்னுடைய பதில் இருந்தது. மின்சாரத் தேக்கத்தில் நீர் நிலைமை ஒரு மாதத்திற்கு முன்னால் திருப்திகரமாக இல்லாத காரணத்தால், மின்சார போர்டார் புதிதாக கனெக்ஷன் கொடுக்கவேண்டாம் ; கொடுத்தால் மின்சார வெட்டு வந்துவிடும் என்ற பயத்தினால் உத்தரவு போட்டார்கள். அந்த உத்தரவு அமுலுக்கு வருவதற்கு முன்னாலேயே அது நிறுத்திவைக்கப்பட வேண்டுமென்று மறு உத்தரவு போடப்பட்டிருக்கிறது.

SRI A. A. RASHEED : May I know whether the Kundah generator is working now ?

THE HON. SRI V. RAMAIAH : A separate question may be put.

SRI A. R. SUBBIAH MUDALIAR : உத்தரவை பேப்பர் மூலமாக பப்ளிஷ் பண்ணிவிட்டால் நல்லது. மனுக் கொடுத்தவர்கள் நேரில் கேட்கும்போது, 'எங்களுக்கு உத்தரவு வரவில்லை' என்று காரணம் சொல்லி மனுவை நிராகரித்துவிடுகிறார்கள். "ப்ரெஸ் கம்யூனிக்கே" கொடுத்து விட்டால் இலகுவாக இருக்கும்.

THE HON. SRI V. RAMAIAH : இந்தக் கேள்விக்கு நான் இங்கே பதில் சொன்னதன் மூலம் அதிக விளம்பரம் கிடைக்கும் என்று நினைக்கிறேன்.

SRI A. VEDARATHNAM : ரத்து செய்த உத்தரவு எப்பொழுது போடப்பட்டது ? எது முதல் அது அமுலுக்கு வருகிறது ? கனெக்ஷன் கொடுக்கத் தடை நீடிக்காமல் செய்து, உடனடியாக கனெக்ஷன் கொடுப்பதற்காக விரைவாக ஏதேனும் ஸர்க்குலர் அனுப்புவதற்கு அரசாங்கம் யோசிக்குமா ?

THE HON. SRI V. RAMAIAH : முதல் உத்தரவு அமுலுக்கு வருவதற்கு முன்னாலேயே அந்த உத்தரவை ரத்து செய்துவிட்டார்கள்.

Use of Hindi numerals

* *S.N.Q.* 9.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether the attention of the Government has been drawn to the reply given by the Hon. Home Minister for Union Government that Madras Government did not protest against the use of Hindi numerals ; and

(*b*) if so, whether the Government propose to protest to the Union Government against the use of Hindi numerals ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) Instructions so far received from the Government of India are to use only international numerals on milestones. Therefore the question of making any protest does not arise.